# சமூக பொருளாதார மற்றும் ஆட்சி நெருக்கடிகளுக்கு மத்தியில் எதிர்ப்பு போராட்ட உரிமைக்கு அரச பதிலளிப்பு

## பெப்ரவரி 2023

## அறிமுகம்

2022ஆம் ஆண்டு இலங்கை முழுவதும் பல எதிர்ப்புப் போராட்டங்கள் இடம்பெற்றன. கடுமையான பொருளாதார நெருக்கடிக்கான பொறுக்கூறல் மற்றும் தீர்வுகள் என்பன தொடர்பான கோரிக்கைகள் மற்றும் போராட்டங்களுக்கு எதிரான அரச ஒடுக்குமுறை என்பன இவற்றுக்கு வலுவூட்டின. குடிமக்கள் தலைமையிலான நீடித்த எதிர்ப்பு இயக்கம் 'அரகலய' (போராட்டம்) முன்னாள் ஜனாதிபதி மற்றும் பிரதமர் (சகோதரர்களான கோட்டாபய மற்றும் மகிந்த ராஜபக்ஷ) ஆகிய இருவரும் பதவி விலகுவதற்கு வழிவகுத்தது.

கடந்த காலங்களில் நடந்தது போலவே போராட்ட இயக்கத்திற்கு எதிராக அரசின் அளவுக்கதிகமான படைபலம் மற்றும் அடக்குமுறை பயன்படுத்தப்பட்டது. இவை சில சந்தர்ப்பங்களில் அமைதியான போராட்டக்காரர்களுக்கு அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்தியது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றுமொரு அரகலய[1] தோற்றம் பெறுவதை தடுப்பதற்காக இராணுவ நடவடிக்கை மற்றும் அவசரநிலை சட்ட அமுலாக்கம் என்பவற்றை மேற்கொள்ளவிருப்பதாக அறிக்கையிட்டார். இந்த அறிக்கையில் உள்ள முரண்பாடு தெளிவாக வெளிப்படுகிறது. ஏனெனில், அவருக்கு முன்னதாக இருந்தவரின் பதவி விலகலுக்கும் ரணில் விக்ரமசிங்கவின் ஜனாதிபதி பதவிக்கும் அரகலயவே வழிவகுத்தது.

நவம்பர் 2021இல் COVID 19 தொற்றுச் சூழலில்[2] எதிர்ப்புப் போராட்ட உரிமைக்கு எதிரான அரச பதிலளிப்பு தொடர்பில் CPA ஒரு கருத்தை வெளியிட்டது. CPA தனது முந்தைய வெளியீட்டில் குறிப்பிட்டபடி அமைதியான முறையிலே ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், ஒருங்குசேர்வதற்கான சுதந்திரம் மற்றும் பேச்சு சுதந்திரம் என்பவற்றில் விதிக்கப்பட்ட அளவுக்கதிகமான பல்வேறு சட்டவிரோத கட்டுப்பாடுகளின் இணை நோக்கங்கள் தொடர்பான கரிசனைகளை மீண்டும் வலியுறுத்துகின்றது.

---

1Ishara Mudugamuwa and Amali Mallawaarachchi, 'No room for another 'aragalaya'' Daily News 24th November 2022 https://www.dailynews.lk/2022/11/24/local/291784/no-room-another-%E2%80%98aragalaya%E2%80%99

2'Comment: Legality of the State Response to the Right to Protest in the light of the Covid-19 Pandemic' Centre for Policy Alternatives 29th November 2021 https://www.cpalanka.org/comment-legality-of-the-state-response-to-the-right-to-protest-in-the-light-of-the-covid-19-pandemic/

மேலும், 2023ஆம் ஆண்டில் எதிர்ப்புகள் மற்றும் குடிமக்களின் அணிதிரட்டல் உட்பட அண்மைக்கால நிகழ்வுகளைத் தடுக்கும் முயற்சிகளை கருத்தில்கொண்டு கருத்து வேறுபாடுகளுக்கு எதிரான அடக்குமுறைகளின் செயல்பாடுகளின் அதிகரிப்பு தொடர்பில் CPA தீவிர அக்கறை கொண்டுள்ளது. இந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் சட்டம் ஒழுங்கு சார்ந்த அதிகாரிகள், நீதிமன்ற உத்தரவுகளைப் பெற்று போராட்டங்களை தடுப்பதற்கு முயன்றனர். மேலும், சத்தியாக்கிரகம்[3] நடத்திக் கொண்டிருந்தவர்களைக் கலைப்பதற்குப் பலத்தை பயன்படுத்தினர். இவ்வாறான கட்டுப்பாடுகள் மத்தியிலும் இலங்கையர்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவிப்பதற்கான உரிமையைப் பயன்படுத்துவது தொடர்பான செயல்பாடுகளில் ஈடுபடுவதும் அவற்றிற்கு ஆதரவளிப்பதும் மகிழ்ச்சி தரும் விடயங்களாகும்.

**<u>சமீபத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் அரச பதிலளிப்பு - காலவரிசை</u>**

CPA ஆனது கடந்த ஆண்டு மற்றும் இந்த ஆண்டு நடந்த சில முக்கிய நிகழ்வுகளை சுருக்கமாக நோக்கக்கூடிய காலவரிசையை உருவாக்கியுள்ளது. இவை நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட போராட்டங்கள் மற்றும் அதற்கு அரசு பதிலளித்த விதம் என்பன தொடர்பானதாகும். ஒரு வருடத்தில், இலங்கையிலுள்ள மக்கள் ஒருமுறையாகவும் குறித்த கால இடைவெளியிலும் முன்னொருபோதும் கண்டிராத வகையில் அணிதிரண்டனர். நடந்த ஒவ்வொரு எதிர்ப்பு அல்லது சம்பவத்தை முழுமையாக ஆவணப்படுத்துவது சாத்தியமில்லை. எதிர்ப்பு தொடர்பில் அரசின் பதிலளிப்பை புரிந்து கொள்வதற்கான சில முக்கிய பதிவுகள் பின்வருமாறு:

---

3 'Police attack peaceful protesters in Colombo protesting government's lavish Independence Day gala' News First 4th February 2023https://english.newsfirst.lk/2023/2/4/police-attack-peaceful-protesters-in-colombo-protesting-government-s-lavishindependence-day-gala

| திகதி | சம்பவம் | அரச பதிலளிப்பு |
|---|---|---|
| மார்ச் 31, 2022 | மிரிஹான போராட்டம் நுகேகொடை ஜுபிலி சந்தியில் ஆரம்பமான போராட்டம் மிரிஹான நகரத்தில் அமைந்துள்ள முன்னால் ஜனாதிபதி கோட்டாபயவின் தனிப்பட்ட இல்லத்தின் அருகே பாரிய போராட்டமாக மாறியது[4]. எதிர்ப்பாளர்கள் பொருளாதார நெருக்கடி மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு பற்றிய கோரிக்கைகளை எழுப்பியதோடு ஜனாதிபதியின் பதவிவிலகலை வலியுறுத்தினர்.[5] இந்தப் போராட்டமானது பொருளாதார நிலைமை காரணமாக இலங்கையில் பல பகுதிகளில் 13 மணிநேர மின்வெட்டு அமுலில் இருந்த நாளில் இடம்பெற்றது.[6] | போராட்டங்களைத் தொடர்ந்து ஊடகவியலாளர்கள் உட்பட பலர் தாக்கப்பட்டதாகவும், அவர்களில் சிலர் விசேட அதிரடிப்படையினரால் (STF)[8] கைது செய்யப்பட்டதாகவும் அறிக்கைகள் வெளிவந்தன. தொடர்ந்து ஜனாதிபதியின் ஊடகப்பிரிவும் மற்றும் முன்னால் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும், நடைபெற்ற சம்பவங்களில் தீவிரவாத குழுக்களின் தலையீடு இருப்பதாக குற்றம் சுமத்தினர்.[9] மேலும் போராட்டக்காரர்கள் மீது PTA இன்[10] கீழ் வழக்கு தாக்கல் செய்யப்படும் என்றும் கருத்து தெரிவித்தனர். எனினும், இத்தீர்மானம் கடுமையான விமர்சனங்களைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படவில்லை. |

4 For a detailed account and timeline, see 'March 31 Protests and Aftermath: Updates' Groundview 2nd April 2022 ://groundviews.org/2022/04/02/march-31st-protests-updates/ and ' Incident report: The Mirihana Protest, a timeline' Watchdog 1st April 2022 https://longform.watchdog.team/observations/incident-report-the-mirihana-protest-summarized

5'Massive protests near President's private residence demanding Sri Lankan President to 'go home'' Colombo Page 31st March 2022 http://www.colombopage.com/archive_22A/Mar31_1648747227CH.php

6 'Sri Lanka schedules power cuts up to 13-hours for March 31' Economy Next 31st March 2022 https://economynext.com/sri-lanka-schedules-power-cuts-up-to-13-hours-for-march-31-92282/

8'Sri Lanka: Several journalists assaulted and detained during Mirihana protests' International Federation of Journalists 4th April 2022 https://www.ifj.org/media-centre/news/detail/category/press-releases/article/sri-lanka-several-journalists-assaulted-and-detained-during-mirihana-protests.html

9Zulfick Farzan, 'Sri Lanka launches probe into extremist links on Mirihana Protest' News First 1st April 2022 https://www.newsfirst.lk/2022/04/01/sri-lanka-launches-probe-into-extremist-links-on-mirihana-protest/

10Zulfick Farzan, 'Mirihana protesters cannot be charged under PTA – Human Rights Commission' News First 1st April 2022 https://www.newsfirst.lk/2022/04/01/mirihana-protesters-cannot-be-charged-under-pta-human-rights-commission/

| | | |
|---|---|---|
| மார்ச் 31, 2022 | மறுநாள்[7] அவசரகால நிலை பிரகடனம் செய்யப்பட்டது. கடந்த ஆண்டு மூன்று சந்தர்ப்பங்களில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. அவற்றில் இது முதலாவது சந்தர்ப்பமாகும். | பொதுச் சொத்துக்களை[11] சேதப்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. கைதுசெய்யப்பட்ட 53 பேர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது நூற்றுக்கணக்கான சட்டத்தரணிகள் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி தமது ஒற்றுமையை வெளிக்காட்டினர். 53 பேரில் பெரும்பாலானவர்களுக்கு பிணை வழங்கப்பட்டது.[12] |

---

7 Uditha Jayasinghe, 'Sri Lanka imposes curfew after president declares state of emergency' Reuters 2nd April 2022 https://www.reuters.com/world/asia-pacific/tight-security-sri-lankas-capital-shops-open-after-state-emergency-order-2022-04-02/

11'Mirihana protest case: AG now decides to pursue charges against Satha Nalaka' The Sunday Times 3rd July 2022 https://www.sundaytimes.lk/220703/news/mirihana-protest-case-ag-now-decides-to-pursue-charges-against-satha-nalaka-487727.html

12 'Over 300 Sri Lanka lawyers flock to represent 53 arrested protesters' 2nd April 2022 https://economynext.com/over-300-sri-lanka-lawyers-flock-to-represent-53-arrested-protesters-92397/

| | | |
|---|---|---|
| ஏப்ரல் 2 மற்றும் 3, 2022 | <u>மக்கள் போராட்டத்தை முன்னிட்டு ஊரடங்கு உத்தரவு</u><br><br>03.04.2022 ஞாயிற்றுக்கிழமை ‘மக்கள் போராட்டம்’’ நடைபெறவிருந்தது.[13] இப்போராட்டம் உத்தியோகப்பூர்வமாக எந்தவொரு குழு அல்லது கட்சியுடனும் தொடர்புபடவில்லை. எனினும், ஆயிரக்கணக்கான விரக்தியடைந்த பொது மக்கள் ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்வர் என வதந்தி பரவியது | அதற்கு முந்தைய நாள் நாடளாவிய ஊரடங்கு வார இறுதி நாட்களில் செயல்படும்படியாக அறிவிக்கப்பட்டது.[14] இது ஆர்ப்பாட்டங்களை நிறுத்துவதற்கான முயற்சியாக தோன்றியது. மேலும், இந்த ஊரடங்கின் சட்டப்பூர்வதன்மை கேள்விக்குறியதொன்றாகும். 3ஆம் திகதி சமூக ஊடகத் தளங்கள் முடக்கப்பட்டன. இதற்கான அறிவுறுத்தல்கள் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டது என்பது வெளிப்படையான விடையமாகும். இச்செயற்பாடு தொடர்பில் அப்போது டிஜிட்டல் தொழில்நுட்பத்துறை இராஜாங்க அமைச்சராக இருந்த நாமல் ராஜபக்ஷ தனது Twitter தளத்தில் கண்டனம் வெளியிட்டுள்ளார்.[15] |

---

13 ‘Sri Lanka: Activists call for nationwide protests April 3’ Crisis 24 2nd April 2022 https://crisis24.garda.com/alerts/2022/04/sri-lanka-activists-call-for-nationwide-protests-april-3-update-6

14 Meera Srinivasan, ‘Sri Lanka imposes curfew until April 4 morning’ The Hindu 2nd April 2022 https://www.thehindu.com/news/international/sri-lanka-imposes-36-hour-curfew-until-6-am-on-april-4/article65284341.ece

15 ‘Namal says social media ban useless because of VPN’ Colombo Gazette 3rd April 2022 https://colombogazette.com/2022/04/03/namal-says-social-media-ban-useless-because-of-vpn/

| | | |
|---|---|---|
| | எதிர்ப்பு போராட்டக்காரர்கள் நாடளாவிய ரீதியில் வீதியில் இறங்கினர்.<br><br>நாடு முழுவதும் ஊரடங்கு சட்டம் மற்றும் சமூக ஊடகங்களின் முடக்கம் என்பன அமுலில் இருந்தபோதிலும் போராட்டக்காரர்கள் வீதியில் இறங்கி தத்தமது இடங்களில் போராட்டங்களை நடத்தினர். கொழும்பில் பிரதானமாகவும் மற்றும் நாடளாவிய ரீதியிலும் போராட்டங்கள் நடைபெற்றன.[16] அதேநாளில் காலை வேளையில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் சுதந்திர சதுக்கத்தில் இந்த சட்டவிரோத பிரகடனத்தை நிராகரித்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடாத்தினார்கள். ஏப்ரல் 4ஆம் திகதி திங்கட்கிழமை வார இறுதி நாள் ஊரடங்கு நீக்கப்பட்ட நிலையில்[17] ஆயிரக்கணக்கான மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து திரண்டபோது மக்களின் போராட்டங்களுக்கு இடையூறு செய்வதற்காக பிரகடனப்படுத்தப்பட்ட ஊரடங்கு தோல்வி கண்டது. | பல இடங்களில் நடைபெற்ற போராட்டங்களுக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. எனினும், பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள்[18] நடாத்திய ஆர்ப்பாட்டத்தின் போது கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை என்பன பிரயோகிக்கப்பட்டன. எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் போராட்டமும் பொலிசாரால் தடுத்து நிறுத்தப்பட்டது.[19] |

16 ‘Photos: Sri Lanka protesters defy curfew after social media ban’ Al Jazeera 3rd April 2022 https://www.aljazeera.com/gallery/2022/4/3/in-pictures-sri-lanka-protesters-defy-curfew-after-social-media
17 ‘Anti-government protests continue in Sri Lanka island wide, Police fire water cannons and tear gas’ Colombo Page 4th April 2022 http://www.colombopage.com/archive_22A/Apr04_1649088932CH.php
18 Zulfick Farzan, ‘Tear Gas & Water Cannons to disperse student protest in Peradeniya’ News First 3rd April 2022 https://www.newsfirst.lk/2022/04/03/tear-gas-water-cannons-to-disperse-student-protest-in-peradeni
19 Zulfick Farzan, ‘SJB protests in Colombo; prevented from entering Independence Square’ News First 3rd April 2022 https://www.newsfirst.lk/2022/04/03/sjb-protests-in-colombo-prevented-from-entering-independence-square/

| | | |
|---|---|---|
| ஏப்ரல் 9, 2022 முதல் | <u>கோடா கோ கம மற்றும் மைனா கோ கம உருவாக்கம்</u><br><br>ஊரடங்கு சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து போராட்டம் தீவிரமாகியது. பல இடங்களில் போராட்டங்கள் தொடர்ந்தன. இலங்கை முழுவதிலும் உள்ள போராட்டக்காரர்கள் ஒருங்கிணைந்து ஏப்ரல் 9ஆம் திகதி காலி முகத்திடலில் ஒன்று கூடி தமது கோரிக்கைகளை முன்வைத்தனர். அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு கோரினர். இந்த இடத்திலேயே அவர்கள் முகாமிடத் தொடங்கினர். இந்த இடம் பின்னர் கோட்டா கோ கம என்று பெயர் சூட்டப்பட்டது.[20] பல மாதங்களாக இந்தத் தளத்தில் 24/7 எதிர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டன.<br><br>பின்னர் ஏப்ரல் மாதத்தில் போராட்டக்காரர்கள் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகைக்கு முன்னால் ஒரு தளத்தை அமைத்து அதனை “மைனா கோ கம” என பெயரிட்டனர். | காலி முகத்திடல் ஆக்கிரமிக்கப்பட்ட ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி முதல் மே மாதம் 9ஆம் திகதி வரை போராட்டக்காரர்களுக்கு எதிராக கடுமையான சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை. ஆனால், அந்த இடத்தில் குறிப்பிடத்தக்க இராணுவ பிரசன்னம் காணப்பட்டது.<br><br>பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படுத்தக்கூடாது என்ற நிபந்தனையுடன், நீதிமன்றம், கோட்டா கோ கம மற்றும் மைனா கோ கம ஆகிய இரண்டு தளங்களையும் தொடர்ந்து செயல்பட அனுமதித்தது.[21] |

---

20 Teena Marian, ‘Protesters set up camp in Galle Face to continue protests’ News First 11th April 2022 https://www.newsfirst.lk/2022/04/11/protesters-set-up-camp-in-galle-face-to-continue-protests/

21 ‘Sri Lanka court orders removal of Mynagogama site if protest doesn’t remain peaceful’ Economy Next 4th May 2022 https://economynext.com/sri-lanka-court-orders-removal-of-mynagogama-site-if-protest-doesnt-remain-peaceful-93826/

| | | |
|---|---|---|
| ஏப்ரல் 19, 2022 | ரம்புக்கன துப்பாக்கிக் சூடு<br><br>எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வுக்கு எதிராக எதிர்ப்பு தெரிவித்து ரம்புக்கனையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் மீது பொலிசார் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் ஒருவர் உயிரிழந்தார். 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். | சம்பவத்தைத் தொடர்ந்து ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு STF அதிரடிப்படையினர் அப்பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.[22] |
| மே 5, 2022 | ஹொரு கோகம போராட்டம்<br><br>மாணவர் அமைப்பினர் பாராளுமன்றம் வரை கண்டன ஊர்வலம் நடத்தி அங்கேயே முகாமிட்டு தங்கினர். 225 பாராளுமன்ற உறுப்பினர்களையும் பதவிவிலகுமாறு கோரியதுடன் அவர்களை ஹொரு (திருடர்கள்) என்று அழைத்தனர்.[23] | போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களும் அப்பகுதியில் உள்ள ஏனையோரும் கண்ணீர்ப்புகை தாக்குதலுக்கு உள்ளானார்கள்.[24] |
| மே 6, 2022 | அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டது<br><br>கடந்த ஆண்டில் பிரகடனம் செய்யப்பட்ட இரண்டாவது அவசர நிலை இதுவாகும். | |

22Buddhika Samaraweera, ‘Protests see first death as Police open fire’ The Morning 20th April 2022 https://www.themorning.lk/protests-see-first-death-as-police-open-fire/
23 Zulfick Farzan, ‘Latest township ‘HoruGoGama’ set up near Parliament’ News First 6th May 2022 https://www.newsfirst.lk/2022/05/06/latest-township-horugogama-set-up-near-parliament/
24 ‘Sri Lanka Police tear gas university students protesting outside parliament’ Colombo Page 5th May 2022 http://www.colombopage.com/archive_22A/May05_1651765982CH.php

| | | |
|---|---|---|
| மே 9, 2022 | <u>கோட்டாகோகம மீது தாக்குதல்</u><br><br>அரசாங்க ஆதரவாளர்கள், அரசாங்கத்திற்கு எதிரான அமைதியான போராட்டத்தளங்களை, கொழும்பிலும், பிற இடங்களிலும் தாக்கினர். முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் பல்வேறு இடங்களிலும் இருந்து பேருந்துகளில் வந்திறங்கினர். பின்னர் அவர்கள் காலி முகத்திடலுக்கு முன்னேறியதுடன் தடிகள் மற்றும் ஏனைய ஆயுதங்களைக் கொண்டு போராட்டக்காரர்களைத் தாக்கினர். கோட்டா கோ கம மற்றும் மைனா கோ கம போராட்ட தளங்களிலிருந்த கூடாரங்களுக்குத் தீ வைத்தனர்.[25] சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் பார்த்துக்கொண்டிருந்தபோது, கோட்டா கோ கம போராட்டக்காரர்கள் மீது கொடூரமான வன்முறைகள் இடம்பெற்றதை வீடியோ காட்சிகள் வெளிப்படுத்தின.[26] | பரவலாக்கப்பட்ட வீடியோ காட்சிகளின்படி கோட்டா கோ கம மற்றும் மைனா கோ கம தளங்கள் மீது தாக்குதல் நடாத்திய அரசாங்க ஆதரவாளர்கள் முதலில் அலரிமாளிகையில் உபசரிக்கப்பட்டுள்ளனர். மேலும் அங்கு பல மூத்த அதிகாரிகள் குழுமியிருந்தவர்களுக்கு உரையாற்றியுள்ளனர். சில சந்தர்ப்பங்களில் அவர்களது உரை கூடியிருந்தவர்களை வன்முறைக்குத் தூண்டியுள்ளது என்று எண்ணத் தோன்றுகிறது. வன்முறையை தூண்டியமைக்காக ராஜபக்ஷவும் ஏனைய அதிகாரிகளும் கைது செய்யப்படவேண்டுமென கோரிக்கை விடப்பட்டது.[29] சில நாட்களுக்குப் பிறகு ராஜபக்ஷவிற்கும் மற்றும் சில அதிகாரிகளுக்கும் நீதிமன்றம் பயணத்தடை விதித்தது.[30] சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளும் தொடர்ந்தன. அதன் பின்னர் அதே தினத்தில் மகிந்த ராஜபக்ஷ தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்தார். |

---

25 ‘Sri Lanka: Government Backers Attack Peaceful Protesters’ Human Rights Watch 10th May 2022 https://www.hrw.org/news/2022/05/10/sri-lanka-government-backers-attack-peaceful-protesters. See also ‘CPA Letter to the IGP and AG requesting action on the violence against peaceful protesters on the 9th May 2022’ Centre for Policy Alternatives 26th May 2022 https://www.cpalanka.org/wp-content/uploads/2022/05/Final-Letter-to-IGP.pdf

26 ‘Thugs Attack Peaceful Protesters, GotaGoGama Destroyed’ Groundviews 9th May 2022 https://groundviews.org/2022/05/09/thugs-attack-peaceful-protesters-gotagogama-destroyed/

29 ‘Authorities urged to arrest Mahinda Rajapaksa’ Colombo Gazette 10th May 2022 https://colombogazette.com/2022/05/10/authorities-urged-to-arrest-mahinda-rajapaksa/

30 Zulfick Farzan, ‘Travel Ban on Ex-PM Mahinda Rajapaksa and 16 others.’ News First 12th May 2022 https://www.newsfirst.lk/2022/05/12/travel-ban-on-ex-pm-mahinda-rajapaksa-and-16-others/

| | | |
|---|---|---|
| | அதனைத் தொடர்ந்து அரசாங்கத்திற்கு எதிரான போராட்ட குழுக்கள் பதில் தாக்குதல் நடாத்தினர். இலங்கை முழுவதும் வன்முறை அதிகரித்தது.<br>பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட சிரேஷ்ட அரச அதிகாரிகளின் சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டன அல்லது அழிக்கப்பட்டன. 220 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.[27]<br>அன்றைய தினத்திலிருந்து இதுவரை ஒரு பாராளுமன்ற உறுப்பினர் உட்பட 09 பேர்களின் இறப்புக்கள் பதிவாகியுள்ளன.[28] பாராளுமன்ற உறுப்பினர் இறப்பு நிகழ்ந்த சூழ்நிலை இதுவரை தெளிவுபடுத்தப்படவில்லை. | பொலிசார் பார்வையாளர்களாக இருந்தனர். காலிமுகத்திடலில் போராட்டக்காரர்களுக்கு எதிரான தாக்குதலை தடுக்க எந்தவொரு நடவடிக்கையையும் அவர்கள் எடுக்கவில்லை.[31] அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர் மீது கண்ணீர் குண்டு பிரயோகம் நடாத்தப்பட்டுள்ளது. பின்னர் சில போராட்ட குழுக்கள் சில அரசாங்க அதிகாரிகளின் வீடுகளுக்கு தீ வைத்து தாக்குதல் நடாத்தியபோது இராணுவம் சிறிதும் தலையிடவில்லை. சம்பவங்களைத் தொடர்ந்து பல கைதுகள் நடந்தன. சுமார் 3800 பேர் கைது செய்யப்பட்டனர்.[32]<br>மே 12ஆம் திகதி பலரை அதிர்ச்சியில் ஆழ்த்திய ஒரு நகர்வில், கோட்டாபய ராஜபக்ஷ, விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்தார்.[33] அவரின் நியமனத்தை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பிரதமர், கோட்டாபய ஜனாதிபதி பதவியில் தொடருவார் எனவும் போராட்டக்காரர்களுக்கு பொலிசாரினால் தீங்கு ஏற்பட அனுமதிக்கப்போவதில்லை. எனவும் கூறினார்.[34] |

---

27 'Sri Lanka: New Emergency regulations and shooting orders threaten human rights' Amnesty International 11th May 2022 https://www.amnesty.org/en/latest/news/2022/05/sri-lanka-new-emergency-regulations-and-shooting-orders-threaten-human-rights/

28 Zulfick Farzan, 'Sri Lanka; 9 dead, 41 vehicles torched in Monday's (9) violence – Defence Secretary' News First 11th May 2022 https://www.newsfirst.lk/2022/05/11/sri-lanka-9-dead-41-vehicles-torched-in-mondays-9-violence-defence-secretary/

31 'Sri Lanka: New Emergency regulations and shooting orders threaten human rights' Amnesty International 11th May 2022 https://www.amnesty.org/en/latest/news/2022/05/sri-lanka-new-emergency-regulations-and-shooting-orders-threaten-human-rights/

32Kasun Warakapitiya, 'May 9 violence and protests: 4000 arrested' The Sunday Times 11th September 2022 https://www.sundaytimes.lk/220911/news/may-9-violence-and-protests-4000-arrested-494822.html

33 'Sri Lanka names new prime minister in bid to address growing crisis' CNBC 12th May 2022 https://www.cnbc.com/2022/05/13/sri-lanka-names-new-prime-minister-in-bid-to-address-growing-crisis.html

34 Rebecca Pavey, ''GotaGoGama will continue, I will not interfere' – PM Ranil Wickremesinghe' Ceylon Today 12th May 2022 https://ceylontoday.lk/2022/05/12/gotagogama-will-continue-i-will-not-interfere-pm-ranil-wickremesinghe/

| | | |
|---|---|---|
| மே 12, 2022 முதல் | <u>நீதிக்கான மட்டக்களப்பு நடை பவணி ஆரம்பமானது</u><br><br>நாடு முழுவதற்குமான ஊரடங்கு உத்தரவுக்கு மத்தியில் புனித செபத்தியார் ஆலயத்தில் இருந்து நீதிக்கான மட்டக்களப்பு நடைபவணி ஆரம்பமானது.[35] | |
| ஜூலை 9, 2022 | <u>ஜனாதிபதி செயலகம் மற்றும் ஜனாதிபதி மாளிகை ஆகியவை ஆக்கிரமிக்கப்பட்டன</u><br><br>முன்னாள் பிரதமர் மே மாதம் 9ஆம் திகதி அன்று பதவி விலகினார். முன்னாள் நீதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஜூன் 9இல் பதவி விலகினார். அதனைத் தொடர்ந்து கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகக்கோரி பாரிய ஆர்ப்பாட்டம் திட்டமிடப்பட்டது.<br>முழு இலங்கையிலிருந்தும் ஆயிரக்கணக்கானோர் கோட்டா கோ கம போராட்டக்களத்திற்கு வந்து அங்கிருந்து பொதுமக்கள் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தினுள் நுழைந்தனர். அதன் பின்னர் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ மாளிகையை ஆக்கிரமித்தனர்.[36] | ஆக்கிரமிப்பு நடைபெற்று சில நாட்களுக்குப் பிறகு, 12ஆம் திகதி, அப்போதைய ஜனாதிபதி நாட்டை விட்டு வெளியேறினார்.[37] இந்த இல்லங்கள் ஆக்கிரமிக்கப்படுவதை தடுப்பதற்காக ஆரம்பத்தில் இராணுவ பலம் பயன்படுத்தப்பட்டது. ஆனால், இறுதியில் போராட்டக்காரர்கள். உள்ளே நுழைந்ததும் இராணுவம் பின்வாங்கியது.<br>இருப்பினும், அன்று மாலையில் ஒரு போராட்டக் குழுவினர் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லம் மீது தாக்குதல் நடாத்தினர். இவர்களுக்கு எதிராக இராணுவ பலம் பிரயோகிக்கப்பட்டது. பல ஊடகவியலாளர்கள் உட்பட பலர் காயமடைந்தனர்.[38] |

---

35 Sarala Emmanuel, 'Sri Lanka: The Batti Walk for Justice: A resistance for fundamental system change' Europe Solidaire Sans Frontières 31st July 2022 https://www.europe-solidaire.org/spip.php?article63466

36'Protesters breach Presidential Secretariat' News Wire 9th July 2022 https://www.newswire.lk/2022/07/09/protesters-breach-presidential-secretariat/

37 Tessa Wong and Matt Murphy, 'Sri Lanka: President Gotabaya Rajapaksa flees the country on military jet' BBC 13th July 2022 https://www.bbc.com/news/world-asia-62132271

38 'Video: Lanka Journalists Attacked, Intense Street Battles Outside PM Home' NDTV 9th July 2022 https://www.ndtv.com/world-news/sri-lanka-crisis-on-camera-journalists-attacked-in-sri-lanka-amid-massive-protests-3143269

| | | |
|---|---|---|
| ஜுலை 17, 2022 | <u>அவசரகால நிலை பிரகடனம்</u><br>இது கடந்த ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்ட மூன்றாவது அவசரகால நிலையாகும். பதில் ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்கவினால் இது நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. | |
| ஜீலை 22, 2022 | <u>ஜனாதிபதி செயலக ஆக்கிரமிப்பின் மீதான தாக்குதல்</u><br><br>ஜுலை 20, 2022 அன்று பாராளுமன்றத்தில் நடந்த இரகசிய வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். அதன் பிறகு ஜுலை 21ஆம் திகதி அவர் பதவியேற்றார்.[39] இதற்கிடையில் போராட்டக்காரர்கள் அலரிமாளிகைக்கு எதிரே உள்ள போராட்டத்தளத்திலிருந்து ஏற்கனவே விலகி விட்டனர். மேலும் கோட்டா கோ கம போராட்டத் தளத்திலிருந்தும் 22ஆம் திகதி பிற்பகல் வேளையில் விலகுவதாக அறிவித்தனர்.[40] | கோட்டா கோ கம போராட்டத்தளத்தில் படையினர் கூடாரங்களை அழித்தனர். பல போராட்டத் தலைவர்களை கைது செய்து, அப்பகுதியை சுற்றி வளைத்தனர். அமைதியான ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீது இராணுவத்தினரால் கொடூரமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.[42] போராட்டக்காரர்களால் சொத்துக்ளுக்கு ஏற்பட்ட சேதம் குறித்து பாதுகாப்புச் செயலாளரினால் அறிக்கை வெளியிடப்பட்டது. ஊடக அறிக்கைகளும் இதற்கு முக்கியத்துவம் அளித்தன.[43] ஜனாதிபதி செயலகத்திற்குச் சென்ற அனைவரையும் அடையாளம் காணும் பணி நடைபெற்று வருவதாக பொலிசார் ஜுலை 24ஆம் திகதி அறிவித்தனர்.[44] |

39 'Sri Lanka's newly elected President Ranil Wickremesinghe sworn in' The Hindu 21st July 2022 https://www.thehindu.com/news/international/sri-lankas-newly-elected-president-ranil-wickremesinghe-sworn-into-office/article65665238.ece
40 Saroj Pathirana, 'Military raids Sri Lanka protest camps, leaders arrested' Al Jazeera 22nd July 2022 https://www.aljazeera.com/news/2022/7/22/military-raids-sri-lanka-protest-camps-leaders-arrested
42 ibid
43 'Defense Secretary observes damages to the Presidential Secretariat' Colombo Page 24th July 2022 http://www.colombopage.com/archive_22B/Jul24_1658675102CH.php
44 'Protesters disregarded multiple requests to vacate Presidential Secretariat: Police' Ada Derana 24th July 2022 http://www.adaderana.lk/news/83831/protesters-disregarded-multiple-requests-to-vacate-presidential-secretariat-police

| | | |
|---|---|---|
| | போராட்டக்காரர்களின் நடவடிக்கை இவ்வாறாக இருந்தபோதிலும் புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முதல் நடவடிக்கையானது இராணுவத்தை ஈடுபடுத்தி ஜனாதிபதி செயலகத்தை மீட்பதாக இருந்தது. நள்ளிரவு நெருங்கும் போது ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இராணுவம் கடுமையாக தாக்குதலை மேற்கொண்டது. இதனை ஆர்ப்பாட்டக்காரர்கள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.[41] | திருட்டு மற்றும் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் ஆகிய குற்றச்சாட்டுக்கள் போராட்டக்காரர்களின் கைதுகளுக்கு வழிவகுத்தன.[45] |
| ஆகஸ்ட் 12, 2022 | <u>காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரின் போராட்டம்</u><br><br>கிளிநொச்சி மற்றும் வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் ஆரம்பித்த வீதியோர போராட்டம் தொடர்ச்சியாக 2000 நாட்கள் இடம் பெற்றது.[46] | காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினரின் போராட்டங்களுக்கு எதிராக ரகசிய கண்காணிப்பு, மிரட்டல் மற்றும் பலத்தை பயன்படுத்துதல் ஆகியன பல வருடங்களாக முன்னெடுக்கப்படுகின்றன. 2022ஆம் ஆண்டு அதற்கு விதிவிலக்கல்ல.[47] |

41 ibid
45 ‘Sri Lanka Police Arrest Man for Allegedly Stealing President's Flags’ VOA 30th July 2022 https://www.voanews.com/a/sri-lanka-police-arrest-man-for-allegedly-stealing-president-s-flags/6680136.html
46 ‘No justice for Tamil families of the disappeared as they reach 2,000 days of continuous protest’ Tamil Guardian 13th August 2022 https://www.tamilguardian.com/content/no-justice-tamil-families-disappeared-they-reach-2000-days-continuous-protest
47 ‘Injured and bruised – Sri Lankan police leave protesting Tamil mother in hospital’ Tamil Guardian 22nd March 2022 https://www.tamilguardian.com/content/injured-and-bruised-sri-lankan-police-leave-protesting-tamil-mother-hospital

| | | |
|---|---|---|
| ஆகஸ்ட் 30, 2022 | <u>IUSF இன் தொடர்ச்சியான போராட்டங்கள்</u><br><br>அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் (IUSF) மற்றும் தொழிற்சங்கங்கள், மற்றும் வெகுசன அமைப்புக்களின் கூட்டு ஆகியன இணைந்து ஒழுங்கமைப்பு செய்த கண்டன பேரணி தொழில்நுட்ப சந்திக்கருகாமையில் நடைபெற்றது. பயங்கரவாத தடைச்சட்டத்தின் (PTA) கீழ் அடக்குமுறை பிரயோகத்தை அரசாங்கம் நிறுத்த வேண்டும் மற்றும் 'அரகலயவில்' கைதுசெய்யப்பட்ட செயற்பாட்டாளர்களை விடுதலை செய்ய வேண்டும் ஆகிய கோரிக்கைகள் இப்பேரணியில் வலியுறுத்தப்பட்டன.[48] | போராட்டக்காரர்களைக் கலைப்பதற்கு பொலிசார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகித்தனர். பொலிசாரும் கலகத் தடுப்புப் பிரிவினரும் போராட்டக்காரர்களைத் துரத்துவதைக் காண முடிந்தது. 25 போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டதாக காவல்துறை ஊடக பேச்சாளர் தெரிவித்தார்.[49] |
| நவம்பர் 18, 2022 | அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே மற்றும் அனைத்து பௌத்த பல்கலைக்கழக ஒன்றியம் சங். கல்வேவா ஸ்ரீதம்மா தேரர், ஆகியோரை உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரி எதிர்ப்புப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டு ஐக்கிய நாடுகள் சபை வளாகத்திற்கு அருகில் நடைபெற இருந்தது.[50] | போராட்டக்காரர்களை கலைப்பதற்கு பொலிசார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகித்தனர்.[51] |

48 'Police use tear gas and water cannons to disperse IUSF protesters' Daily FT 31st August 2022 https://www.ft.lk/news/Police-use-tear-gas-and-water-cannons-to-disperse-IUSF-protesters/56-739289
49 ibid
50 'Police fire tear gas to disperse IUSF protesters' Ada Derana 18th November 2022 http://www.adaderana.lk/news/86224/police-fire-tear-gas-to-disperse-iusf-protesters
51 ibid

| | | |
|---|---|---|
| டிசெம்பர் 8, 2022 | ஸ்ரீ லங்கா டெலிகொம் (SLT) மற்றும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் ஆகியவற்றிலிருந்து சுமார் 3000 ஊழியர்கள், தனியார்மயத்திற்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.[52] | |
| ஜனவரி 15, 2023 | ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் விஜயத்தின் போது யாழ்ப்பாணத்தில் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது. | யாழ்ப்பாணம் நல்லூர் பகுதிக்கு போராட்டக்காரர்களை ஏற்றிச் சென்ற பேரூந்துகளை பொலிஸாரும் இராணுவத்தினரும் தடுக்க முயன்றனர். போராட்டக்காரர்களில் பல்கலைக்கழக மாணவர்களும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரும் இணைந்திருந்தனர். பொலிஸார் நீர்த்தாரை பிரயோகித்து போராட்டக்காரர்களை கலைத்தனர்.[53] |
| பெப்ரவரி 3, 2023 | <u>கொழும்பில் போராட்டங்கள்</u><br><br>பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சுதந்திர தினத்தை கோலாகலமாக கொண்டாடுவதற்கு ஜனாதிபதி விக்ரமசிங்க எடுத்த தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒரு அமைதியான குழுவினர் மருதானையில் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டனர்.[54] | 75ஆவது சுதந்திர தின விழா நடைபெற இருந்த காலி முகத்திடல் பகுதிக்குள் போராட்டக்காரர்கள் நுழைவதைத் தடுக்கும் உத்தரவை கொழும்பு கோட்டை நீதவான் பிறப்பித்தார்.[55] |

---

52 'Thousands of workers protest against privatisation in Sri Lanka' WSWS 9th December 2022 https://www.wsws.org/en/articles/2022/12/10/nnzb-d10.html

53 'Police fire water cannons on Jaffna protesters' Colombo Gazette 15th January 2023 https://colombogazette.com/2023/01/15/police-fire-water-cannons-on-jaffna-protesters/

54 'Police attack peaceful protesters in Colombo protesting government's lavish Independence Day gala' News First 4th February 2023 https://english.newsfirst.lk/2023/2/4/police-attack-peaceful-protesters-in-colombo-protesting-government-s-lavish-independence-day-gala

55 'Court bans protests that interfere with National Independence Day event at Galle Face' Colombo Page 3rd February 2023 http://www.colombopage.com/archive_23A/Feb03_1675448302CH.php

| | | |
|---|---|---|
| | | சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்கு மருதானையில் பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகித்தனர். சந்து வழிகளில் பொலிஸார் போராட்டக்காரர்களை துரத்துவது அவதானிக்கப்பட்டது.[56]<br>பல போராட்டக்காரர்கள் தடுத்து வைக்கப்பட்டனர். அவர்களுக்கு சட்டத்தரணிகளை அணுகுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.[57]<br>மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCL), சம்பவங்கள் பற்றிய ஆரம்ப கட்ட விசாரணையை முன்னெடுத்துள்ளதாக அறியப்படுகிறது.[58] |
| பெப்ரவரி 4, 2023 | 75ஆவது சுதந்திர தினத்தன்று போராட்டங்களை நடத்த திட்டமிடப்பட்டது.<br><u>சுதந்திர தினத்தில் யாழ்ப்பாணத்தில் போராட்டம்.</u><br>யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு வெளியே இந்தப் போராட்டம் ஆரம்பமானது. இந்நிகழ்வை குறிப்பதற்காக வளாகத்தில் கறுப்புக்கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன. | |

---

56 'Police attack peaceful protesters in Colombo protesting government's lavish Independence Day gala' News First 4th February 2023 https://english.newsfirst.lk/2023/2/4/police-attack-peaceful-protesters-in-colombo-protesting-government-s-lavish-independence-day-gala
57 Dithmini De Silva, 'Peaceful protesters detained last night denied access to lawyers – Saliya Pieris' News First 4th February 2023 https://www.newsfirst.lk/2023/02/04/peaceful-protesters-detained-last-night-denied-access-to-lawyers-saliya-pieris/
58 Sandro Sathyajith, 'HRCSL Probes attack on peaceful protesters in Maradana on eve of Independence Day' News First 4th February 2023 https://www.newsfirst.lk/2023/02/05/hrcsl-probes-attack-on-peaceful-protesters-in-maradana-on-eve-of-independence-day/

| | | |
|---|---|---|
| | யாழில் உள்ள வர்த்தகர்கள் போராட்டக்காரர்களுடனான தமது ஒற்றுமையை வெளிப்படுத்துவதற்காக ஒரு நாள் முழுவதும் யாழ்ப்பாணத்தில் ஹர்த்தால் நடத்தி கதவடைப்பு செய்தனர்.[59] | |
| பெப்ரவரி 11, 2023 | யாழ். கலாசார மண்டபத்தைத் திறந்து வைப்பதற்கு வருகை தந்த ஜனாதிபதிக்கு எதிராக கறுப்புக் கொடி போராட்டம் நடைபெற்றது.[60] | பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் மற்றும் 17 பேர் கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். போராட்டத்திற்கு எதிராக நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டது.[61] |

## கட்டுப்பாடுகளின் தன்மை

COVID-19 பரவலை முகாமை செய்தல் என்ற போர்வையில் எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமையை ஒடுக்குவது தொடர்பான பல போக்குகள் 2021ஆம் ஆண்டில் காணப்பட்டது. எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமையை குறிப்பிடத்தக்களவு கட்டுப்படுத்துவதற்காக 2022ஆம் ஆண்டில் அவசரநிலை விதிகள் மற்றும் இணைந்த நியதிச்சட்டங்கள் என்பன தவறாக பயன்படுத்தப்பட்டன. படையினரின் பலப்பிரயோகம் மற்றும் கைதுகள் அதிகரித்துக்காணப்பட்டன. மேலும் பரவலான இராணுவ மற்றும்/ அல்லது பொலிஸ் பிரசன்னத்தினால் உருவாக்கப்பட்ட அச்சுறுத்தல் சூழல், அதனுடன் இணைந்த வகையில் போராட்டக்காரர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் வழக்கறிஞர்கள், விசாரணை அதிகாரிகளால் விசாரணை செய்யப்படுவதும் கைது செய்யப்படுவதுமான செயல்பாடுகள் தீவிர கரிசனைகளுக்குக் காரணமாக உள்ளன.

அமைதியான முறையிலே ஒன்றுகூடுவதற்கான மற்றும் ஒருங்குசேர்வதற்கான சுதந்திரத்திற்கான உரிமைகள் தொடர்பான விசேட அறிக்கையாளர் கூறியதாவது, “கருத்தில் கொள்ளப்பட்ட சமூகங்களின் அதிருப்தி மற்றும் எதிர்ப்புகளுக்கான காரணம் என்பன தொடர்பாக பங்கெடுத்தல் மூலம் அல்லாமல் நிறைவேற்று அதிகாரத் தீர்மானங்களை பயன்படுத்துவதன் மூலமாக எதிர்ப்புகள் தடுக்கப்படுவதாக தெரிகின்றது.”[62]

---

59 ‘'Black day for Tamil homeland!' - Tamils in Jaffna protest Sri Lanka's Independence Day celebrations’ Tamil Guardian 4th February 2023 https://www.tamilguardian.com/content/black-day-tamil-homeland-tamils-jaffna-protest-sri-lankas-independence-day-celebrations
60 ‘MA Sumanthiran strongly condemns arrest of Selvarajah Kajendran’ Tamil Guardian 12th February 2023 https://www.tamilguardian.com/content/ma-sumanthiran-strongly-condemns-arrest-selvarajah-kajendran
61 ‘MP Selvarajah Kajendran released on bail’ Colombo Gazette 12th February 2023 https://colombogazette.com/2023/02/12/mp-selvarajah-kajendran-released-on-bail/
62‘Follow-up to country visits to Tunisia, Armenia, Sri Lanka and Zimbabwe: Report of the Special Rapporteur on the rights to freedom of peaceful assembly and of association, Clément Nyaletsossi Voule’ Human Rights Council, A/HRC/50/23/Add.3 https://www.ohchr.org/sites/default/files/2022-06/A_HRC_50_23_Add3_AdvanceUneditedVersion.docx

**பாதுகாப்பு சட்டங்களை தவறாகப் பயன்படுத்துதல்**

அடக்கு முறைக்கான ஒரு கருவியாக அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்துவது ஒரு புதுமையான நிகழ்வு அல்ல. என்றாலும் அவசாரகால நிலை, அவசரகால விதிமுறைகள் மற்றும் பயங்கரவாத தடைச்சட்ட ஏற்பாடுகளின் பயன்பாடு (PTA) என்பவற்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் கடந்த வருடம் போராட்டக்காரர்களை கைதுசெய்து தடுத்து வைத்த ஏற்பாடுகள் சர்ச்சைக்குரிய மரபு தொடர்வதற்கான அறிகுறியாகும் (அரசாங்கத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ள போதிலும்). எதிர்ப்பை அடக்குவதற்கு பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களை பயன்படுத்துவதாவது எதிர்ப்புப் போராட்டங்களை, பொது பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு/ பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு சமன் செய்வது போன்ற ஆபத்தான தாக்கங்களை கொண்டுள்ளது.[63]

**பொதுப் பாதுகாப்பு கட்டளைச் சட்டம்**

2022ஆம் ஆண்டில் அவசரகால நிலைமை மூன்று முறை பிரகடனப்படுத்தப்பட்டது. அவசரகால ஒழுங்கு விதிகள் வருடத்தில் இரண்டு முறை அறிவிக்கப்பட்டன.

ஏப்ரல் 1, 2022 அன்று அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவசரகால நிலையை அறிவித்தார். பின்னர் ஏப்ரல் 5ஆம் திகதி அவசர நிலை ஒழுங்கு பிரகடனப்படுத்தப்படாமல் ரத்து செய்யப்பட்டது.[64] மே 6, 2022 அன்று மீண்டும் அவசரகாலச் சட்டம் மற்றும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டன. மற்றும் மே 9 அன்று, பின்திகதியிடப்பட்ட அவசரகால ஒழுங்கு விதிகள் அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டன.

ஜுலை 17, 2022 அன்று, பதில் ஜனாதிபதி (அவரது அன்றைய பதவி) ரணில் விக்ரமசிங்க அவசரநிலையை பிரகடனப்படுத்தினார்.[65] மற்றும் ஜுலை 18, 2022 அன்று அவசரநிலை ஒழுங்கு முறைகளை (நானாவித ஏற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள்) நடைமுறைக்குக் கொண்டுவந்தார், இல.1, 2022.[66]

---

63‘Statement on the use of Detention Orders issued under the PTA by President Ranil Wickremesinghe’ Centre for Policy Alternatives 24th August 2022 https://www.cpalanka.org/wp-content/uploads/2022/08/CPA-statement-in-regard-to-the-use-of-PTA-to-issue-detention-orders.pdf

64‘Emergency Regulations promulgated in May and July 2022’ Centre for Policy Alternatives 17th August 2022 https://www.cpalanka.org/wp-content/uploads/2022/07/Emergency-Regulations-promulgated-in-May-and-July-2022-Edited.pdf

65 Gazette Extraordinary No.2288/30

66 Gazette Extraordinary No.2289/07

ஏப்ரல் 1ஆம் திகதி அறிவிக்கப்பட்ட பிரகடனமானது அது அறிவிக்கப்பட்ட உடனேயே ரத்து செய்யப்பட்டது. மேலும் அது, அரசியலமைப்பு உறுப்புரை 155(6) இன் பிரகாரம் பாராளுமன்றத்தில் பரிசீலனைக்கு உட்படுத்தப்படவில்லை. எனினும், இதன் சட்டபூர்வத்தன்மையை சவாலுக்கு உட்படுத்தும் பல அடிப்படை உரிமை மனுக்களைத் தொடர உச்ச நீதிமன்றம் ஜுலை 6, 2022 அன்று அனுமதி வழங்கியது.

2022ஆம் ஆண்டு மே மாத ஆரம்பத்தில் பிரகடனப்படுத்தப்பட்ட இரண்டாவது அவசரநிலை மற்றும் ஒழுங்க விதிகள் என்பவற்றை சவாலுக்கு உட்படுத்தி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஜுன் 6, 2022 அன்று மனு ஒன்றை உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்தது.[67] ஜுலை மாதம் ஜனாதிபதி விக்ரமசிங்கவினால் பிரகடனப்படுத்தப்பட்ட மூன்றாவது அவசரநிலை மற்றும் ஒழுங்கு விதிகளை, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 2022 ஆகஸ்ட் மாதத்தில் சவாலுக்கு உட்படுத்தியது.[68]

**<u>பயங்கரவாத தடுப்புச் சட்டம்</u>**

இதற்கிடையில் சமீபத்திய மாதங்களில் போராட்டக்காரர்களை கைதுசெய்து தடுத்து வைப்பதற்கு PTA பயன்படுத்தப்பட்டது. குடிமக்களின் அடிப்படை உரிமைகளை கட்டுப்படுத்துவதற்காக அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களால் பயன்படுத்தப்பட்ட PTA, ஒரு நீண்ட சர்ச்சைக்குரிய வரலாற்றைக் கொண்டுள்ளது. மேலும், இந்தக் கொடூரமான சட்டத்தை ரத்துச் செய்யவேண்டும் என்று தொடர்ந்து கோரிக்கைகள் எழுந்துள்ளன.[69]

கடந்த ஆண்டு இலங்கை மனித உரிமை ஆணைக்குழு (HRCSL)[70] மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் (BASL)[71] என்பன, போராட்டக்காரர்களை கைதுசெய்வதற்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் PTA பயன்படுத்தப்படுவதையிட்டு எச்சரிக்கை செய்தன. இச்சட்டம் பயன்படுத்தப்படமாட்டாது என்று சமீபத்தில் பிரதமர் உறுதியளித்ததாக தெரிவிக்கப்பட்டது[72]

---

67‘Emergency Regulations promulgated in May and July 2022’ Centre for Policy Alternatives 17th August 202 https://www.cpalanka.org/wp-content/uploads/2022/07/Emergency-Regulations-promulgated-in-May-and-July-2022-Edited.pdf

68 ‘The Centre for Policy Alternatives and Dr. Paikiasothy Saravanamuttu vs. The Attorney General [SC FR 262/ 2022]’ Centre for Policy Alternatives 8th August 2022 https://www.cpalanka.org/the-centre-for-policy-alternatives-and-dr-paikiasothy-saravanamuttu-vs-the-attorney-general-sc-fr-262-2022/

69‘Statement on the use of Detention Orders issued under the PTA by President Ranil Wickremesinghe’ Centre for Policy Alternatives 24th August 2022 https://www.cpalanka.org/wp-content/uploads/2022/08/CPA-statement-in-regard-to-the-use-of-PTA-to-issue-detention-orders.pdf protesters

70 Zulfick Farzan, ‘Mirihana protesters cannot be charged under PTA – Human Rights Commission’ News First 1st April 2022 https://www.newsfirst.lk/2022/04/01/mirihana-protesters-cannot-be-charged-under-pta-human-rights-commission/

71 ‘BASL slams govt over abuse of PTA to arrest and detain protesters’ Ada Deranan 23rd August 2022 http://www.adaderana.lk/news/84491/basl-slams-govt-over-abuse-of-pta-to-arrest-and-detain-protesters

72 ‘PM assures PTA will not be used to arrest protesters’ Colombo Gazette 31st August 2022 https://colombogazette.com/2022/08/31/pm-assures-pta-will-not-be-used-to-arrest-protesters/

இருப்பினும், உள்நாட்டு மற்றும் சர்வதேச பரிசீலனைக்கு மத்தியில்,[73] ஆகஸ்ட் 18, 2022 அன்று கொழும்பு, யூனியன் பிளேசில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து அனைத்து பல்கலைக்கழக ஒன்றிய எற்பாட்டாளர் வசந்த முதலிகே மற்றும் ஏனைய மாணவ செயற்பாட்டாளர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.[74] அதனையடுத்து வசந்த முதலிகே, செயற்பாட்டாளர் ஹசன்த ஜீவன்த குணதிலக மற்றம் சங். கல்வேவா ஸ்ரீதம்மா தேரர் ஆகியோரை PTA இன் கீழ் 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சருமான ரணில் விக்ரமசிங்கவினால் அனுமதி வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.[75] டிசம்பர் 6ஆம் திகதி, மூன்று மாதங்களுக்கு மேலான காலத்தின் பின்னர் வசந்த முதலிகே மற்றும் சங். ஸ்ரீதம்ம தேரர் ஆகியோருக்கு கடுவெல நீதவான் நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.[76] இருப்பினும் ஜனவரி 17, 2023 அன்று கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் வசந்த முதலிகே ஜனவரி 31ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.[77] அவர் 150 நாட்களுக்கும் மேலாக PTA[78] வின் கீழ் காவலில் வைக்கப்பட்டு ஜனவரி 31, 2023 அன்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.[79]

## அரச இரகசியங்கள் சட்டம்

செப்டம்பர் 23, 2022 அன்று ஜனாதிபதி விக்ரமசிங்க, 1955ஆம் ஆண்டு தொன்மையான அரச இரகசியங்கள் சட்டத்தின் கீழ், கொழும்பு மாவட்டத்தில் குறிப்பிட்ட பகுதிகளை உயர்பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தியதாக தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட இடங்கள், பாராளுமன்றம், ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகம்[80] என்பவற்றை உள்ளடக்கியது. இந்தப்பகுதிகள், பொது மக்களின் போராட்டங்களுக்கு பிரபலமான இடங்களாகும். ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப உயர்பாதுகாப்பு வலயங்களுக்குள் பொதுக்கூட்டங்கள் அல்லது பேரணிகள் நடத்துவதற்கு பொலிஸ் மா அதிபரின் (IGP) அல்லது மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பதில் பொலிஸ் மா அதிபரின் எழுத்துமூல அனுமதி தேவை.

---

73 'Sri Lanka faces international censure over arrests' France 24 22nd August 2022 https://www.france24.com/en/live-news/20220822-sri-lanka-faces-international-censure-over-arrests
74 'IUSF Convener Wasantha Mudalige arrested' News First 18th August 2022 https://www.newsfirst.lk/2022/08/18/iusf-convener-wasantha-mudalige-arrested/
75 'Wasantha Mudalige, and two others to be held for 90-days under the PTA' News First 22nd August 2022 https://www.newsfirst.lk/2022/08/22/wasantha-mudalige-and-two-others-to-be-held-for-90-days-under-the-pta/
76 'Wasantha Mudalige and Ven. Siridhamma Thero granted bail' Ada Derana 6th December 2022 http://www.adaderana.lk/news/86639/wasantha-mudalige-and-ven-siridhamma-thero-granted-bail
77 'Wasantha Mudalige remanded further' Ada Derana 17th January 2023 https://www.adaderana.lk/news.php?nid=87660
78'End Arbitrary Detention Of Student Activist: Wasantha Mudalige Held 150 Days Under Draconian PTA' Colombo Telegraph 16th January 2023 https://www.colombotelegraph.com/index.php/end-arbitrary-detention-of-student-activist-wasantha-mudalige-held-150-days-under-draconian-pta/
79 'Wasantha Mudalige released from terror charges' News Wire 31st January 2023 https://www.newswire.lk/2023/01/31/wasantha-mudalige-released-from-terror-charges/
80 Gazette No 2298/53 of 23 September 2022 http://documents.gov.lk/files/egz/2022/9/2298-53_E.pdf

ஆரம்பத்தில் இந்த ஒழுங்கு விதிகள், இந்தச் சட்டத்துடன் தெளிவாக பொருந்தவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. இச்சட்டம் அரச இரகசியங்களை பாதுகாக்கும் நோக்கத்திற்காக வரைவு செய்யப்பட்டது. இந்த பிரகடனங்கள் ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்துவதற்கும் எதிர்ப்பை முடக்குவதற்குமான ஒரு தெளிவான முயற்சியாகும். மேலும், இது ஒரு ஆபத்தான முன்னுதாரணமாகும்.[81] இதற்கு எதிராக பல அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. பின்பு ஒக்டோபர் 1, 2022 இல் இந்த வர்த்தமானி ரத்துச் செய்யப்பட்டது.[82]

**மற்றச் சட்டங்களை தவறாக பயன்படுத்துதல்**

2022ஆம் ஆண்டில் ஏற்கனவே உள்ள சட்டங்களில், எதிர்ப்புகளை ஒடுக்கும் நோக்கத்திற்காக தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் போராட்டக்காரர்களுக்கு எதிராக சட்டபூர்வ பழிவாங்கல் அதிகரிப்பு போன்ற போக்குகள் காணப்பட்டன. மார்ச் இறுதி காலப்பகுதியில் இடம்பெற்ற ஆரம்ப போராட்டங்களின் போது பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததாக கூறப்படும் சந்தேக நபர்களுக்கு எதிராக பொதுச்சொத்து சட்டம் மற்றும் நாட்டின் பொதுவான சட்டம் என்பவற்றின் கீழ் குற்றம் சுமத்தப்படும் என்று சிரேஷ்ட பொலிஸ் பேச்சாளர் அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.[83]

அடுத்தடுத்த மாதங்களில் பொதுச்சொத்து சட்டம் மீண்டும் அமுல்படத்தப்பட்டது. பொதுக்கட்டடங்கள் மற்றும் இடங்களை ஆக்கிரமித்த போது பொதுக்சொத்துகளுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் போராட்டக்காரர்களை கைது செய்வதற்கு இச்சட்டம் பயன்படுத்தப்பட்டது. இது, போராட்டக்காரர்களை தண்டிப்பதற்கு நியதிச்சட்டம் பயன்படுத்தப்படும் போக்கை வெளிப்படுத்தியது.

பொதுசொத்துக்கள் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களுக்கு பிணை கிடைப்பதில் உள்ள சிக்கல்கள் தொடர்பான விடயங்கள், போராட்டக்காரர்கள் சார்பில் முன்னிலையாகிய வழக்கறிஞர்களால் வலியுறுத்தப்பட்டுள்ளது.[84]

---

81‘CPA statement on High Security Zone Order No. 1 of 2022’ Centre for Policy Alternatives 25th September 2022 https://www.cpalanka.org/wp-content/uploads/2022/09/CPA-Statement-High-Security-Zones-Official-Secrets-ActRegulationFinal.pdf
82 ‘Gazette on high security zones revoked’ Ada Derana 1st October 2022 http://www.adaderana.lk/news/85280/gazette-on-high-security-zones-revoked
83‘Sri Lanka’s violent protest costs Rs.39 mln; protesters to be charged under common law-police’ Economy Next 1st April 2022 https://economynext.com/sri-lankas-violent-protest-costs-rs-39-mln-protesters-to-be-charged-under-common-law-police-92386/
84 Kasun Warakapitiya, ‘May 9 violence and protests: 4000 arrested’ Sunday Times 11st September 2022 https://www.sundaytimes.lk/220911/news/may-9-violence-and-protests-4000-arrested-494822.html

போராட்டக்காரர்களுக்கு எதிரான சட்டத்தடைகளின் பரந்த போக்குகளுக்கு ஏற்ப பொலிசார் தொடர்ச்சியாக போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதற்கு எதிராக தடை உத்தரவு கோரியுள்ளனர்.[85] இது தவிர, குற்றவியல் சட்டக்கோவை[86], சட்டக்கோவை மற்றும் பொலிஸ் கட்டளைச்சட்டம்[87] என்பன போராட்டக்காரர்களை கைது செய்வதற்கு வழக்கமாக பயன்படுத்தப்படுகின்றது.

**<u>தன்னிச்சையான கைதுகள் மற்றும் மிரட்டல்கள்</u>**

கடந்த ஆண்டு நடந்த போராட்டங்களின் போதும் அதைத் தொடர்ந்தும் பல கைதுகள் இடம்பெற்றன. சில சந்தர்ப்பங்களில் சட்டத்தினால் உறுதியளிக்கப்பட்ட செயல்முறை உத்தரவாதங்கள் கைதுசெய்யப்பட்ட போராட்டக்காரர்களுக்கு வழங்கப்படவில்லை.[88] உதாரணமாக IUSF செயற்பாட்டாளரான வீரங்க புஸ்பிகா என்பவர் பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்த போது சிவில் உடையில் நீல நிற ஜீப் வண்டியில் வந்த பொலிஸ் அதிகாரிகளால் வலுக்கட்டாயமாக அழைத்துச்செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.[89] மேலும் 2023, பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முந்தைய நாளில் அமைதிவழி போராட்டக்காரர்கள் தடுத்து வைக்கப்பட்டதாகவும் அவர்களுக்கு வழக்கறிஞர்களை அணுகுதல் போன்ற உரிய உத்தரவாதங்கள் மறுக்கப்பட்டதாகவும், பெப்ரவரி 4, 2023 இல் அறிக்கைகள் வெளிவந்தன.[90]

---

85 Siranjani Kumari, 'injunction order issued preventing holding of demonstrations near Parliament, surrounding roads' Daily News 8th December 2022 https://www.dailynews.lk/2022/12/08/law-order/292695/injunction-order-issued-preventing-holding-demonstrations-near
86 'Mirihana protesters to be charged under Penal Code & Public Property Act' The Morning May 2022 https://www.themorning.lk/mirihana-protesters-to-be-charged-under-penal-code-public-property-act/
87 'Police explain why protesters were arrested' News Wire 24th September 2022 https://www.newswire.lk/2022/09/24/police-explain-why-protesters-were-arrested/
88 'Sri Lanka: Penalized for Protesting: Sri Lanka's Crackdown on Protesters' Amnesty International 8th September 2022 https://www.amnesty.org/en/documents/asa37/5986/2022/en/
89 'Police arrest IUSF activist Veranga Pushpika' Daily Mirror 27th July 2022 https://www.dailymirror.lk/top_story/Police-arrest-IUSF-activist-Veranga-Pushpika/155-241908
90 Dithmini De Silva, 'Peaceful protesters detained last night denied access to lawyers – Saliya Pieris' News First 4th February 2023 https://www.newsfirst.lk/2023/02/04/peaceful-protesters-detained-last-night-denied-access-to-lawyers-saliya-pieris/

ஜனாதிபதி மாளிகையில் கண்டெடுக்கப்பட்ட பணத்தை பொலிஸாரிடம் ஒப்படைத்தது[91] மற்றும் ஜனாதிபதியின் ஆசனத்தில் அமர்ந்திருந்தது[92] போன்ற சட்ட அடிப்படை இல்லாத காரணங்களுக்காக சில போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர். சிவில் விடயங்களில் கீழ்ப்படியாமையை குற்றமாக்குவதும், ஊக்கமிழக்கச் செய்வதும் மற்றும் போராட்டக்காரர்களை மிரட்டுவதுமே இதன் நோக்கம் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.[93]

கைது செய்யப்பட்ட போராட்டக்காரர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு வழக்கறிஞர் பொலிஸாரின் செயல்களைப் பற்றி பின்வருமாறு கூறியுள்ளார், “கைதுசெய்யப்பட்ட போராட்டக்காரர்களைத் தொடர்ந்து தடுத்து வைப்பதற்கும் மேலும் ஒரு வாரம் தடுப்புக் காவலில் வைப்பதற்கும் பொலிசார் நீதவானிடம் அடையாள அணிவகுப்பை கோருகின்றனர்.”[94]

போராட்டக்காரர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கு எதிராக சட்டரீதியான பழிவாங்கலும் மிரட்டலும் தந்திரமாகப் பயன்படுத்தப்படுகின்றன. PTAஇன் கீழ் கைதுசெய்யப்பட்ட போராட்ட மாணவர்களை பிரதிநிதித்துவப்படுத்திய சட்டத்தரணி நுவன் போபகே ஜனாதிபதி மாளிகையில் சட்டவிரோதமாக நுழைந்ததாக குற்றம்சாட்டப்பட்டு 59ஆவது சந்தேக நபராக, நவம்பர் மாதம் பெயரிடப்பட்டுள்ளார்.[95] மேலும் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனையோர் குற்றவியல் விசாரணை திணைக்களத்தினால் (CID) விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இச்செயற்பாடு அவர்களை மிரட்டும் முயற்சியாகும். போராட்டங்களின் போது பொலிசார் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ததை அடையாளம்காண பொது மக்களின் ஆதரவைக் கோரும் சமூக ஊடகப் பதிவு தொடர்பாக ஊடகவியலாளர் தரிந்து ஜெயவர்தனவிடம் CID இனரால் நவம்பர் மாதம் விசாரணை நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.[96]

---

91‘Sri Lankan court orders police to produce Rs 17.8 million found inside President’s House’ The Print 28th July 2022 https://theprint.in/world/sri-lankan-court-orders-police-to-produce-rs-17-8-million-found-inside-presidentsouse/1059282/

92 Indika Ramanayake, ‘□□□□□ □□□ □□□□□□ □□□□ □□ □□□□□ □□□□□ □□□□□□’ Lankadeepa 10th August 2022 https://www.lankadeepa.lk/latest_news/%E0%B6%A2%E0%B6%B1%E0%B6%B4%E0%B6%AD%E0%B7%92%E0%B6%B1%E0%B7%92%E0%B6%BD%E0%B6%B4%E0%B7%94%E0%B6%A7%E0%B7%94%E0%B7%80%E0%B7%9A%E0%B7%80%E0%B7%8F%E0%B6%A9%E0%B7%92%E0%B7%80%E0%B7%96%E0%B6%9A%E0%B6%AD%E0%B7%94%E0%B6%B1%E0%B7%8A%E0%B6%AF%E0%B7%99%E0%B6%9A%E0%B6%9A%E0%B7%8A%E0%B6%85%E0%B6%BD%E0%B7%8A%E0%B6%BD%E0%B6%BA%E0%B7%92/1-617903

93 ‘Sri Lanka: Penalized for Protesting: Sri Lanka’s Crackdown on Protesters’ Amnesty International 8th September 2022 https://www.amnesty.org/en/documents/asa37/5986/2022/en/

94Kasun Warakapitiya, ‘May 9 violence and protests: 4000 arrested’ Sunday Times 11st September 2022 https://www.sundaytimes.lk/220911/news/may-9-violence-and-protests-4000-arrested-494822.html

95Zulfick Farzan, ‘Attorney Nuwan Bopage named suspect for illegally entering President’s House’ News First 11th November 2022 https://www.newsfirst.lk/2022/11/11/attorney-nuwan-bopage-named-suspect-for-illegally-entering-president-s-house/

96‘CID questions journalist for seeking info to identify Police officials to file FR’ News Wire 14th November 2022 https://www.newswire.lk/2022/11/14/cid-questions-journalist-for-seeking-info-to-identify-police-officials-to-file-fr/

2022ஆம் ஆண்டு போராட்டங்களுக்கு முந்திய இராணுவமயமாக்கல் சூழலில் கைதுகள் மிரட்டல் போன்ற சம்பவங்கள் இடம்பெற்றன. போராட்டங்களின் போது கொழும்பு மற்றும் பிற இடங்களில் ஈடுபடுத்தப்பட்ட இராணுவ மற்றும் பொலிஸ் பிரசன்னம் ஒரு பரந்த போக்கின் அறிகுறியாகும்.[97] சமீபத்திய மாதங்களில் ஒரு பாரிய அளவிலான பொலிஸ் நடமாட்டம் எதிர்ப்புத் தளங்களில் காணப்பட்டது. ஒரு சில போராட்டக்காரர்களை கைதுசெய்வதற்கு பல பொலிஸ் உத்தியோகத்தர்களின் பிரசன்னம் பற்றிய செய்திகள் வெளிவந்துள்ளன.[98] அதிகாரத் துஷ்பிரயோகம் மற்றும் பொலிஸாரின் மிருகத்தனம் என்பன பொலிஸாரின் ஒட்டுமொத்த நடத்தையை வெளிப்படுத்துகிறது.

முறாக, அரசாங்க ஆதரவாளர்கள் மற்றும் ஏனைய அரசாங்கச் சார்பு நபர்கள் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தும் போதும், போராட்டத் தளங்களை அழிக்கும் போதும் பொலிஸார் பார்வையாளர்களாக நின்று கொண்டிருந்த சம்பவங்களும் உண்டு.[99]

**<u>சமனற்ற தன்மை</u>**

“குறைந்தபட்ச பலத்தை’ பயன்படுத்துவதாக உறுதியளிக்கப்பட்ட போதிலும், போராட்டங்களுக்கு எதிராக பாதுகாப்பு படையினர் பலத்தைப் பயன்படுத்துவதில் தெளிவான அதிகரிப்பு காணப்படுகின்றது. ரணில் விக்ரமசிங்க பதில் ஜனாதிபதியாக பதவியேற்றவுடன் ஒழுங்கை நடைமுறைப்படுத்துவதற்கு “தேவையானவற்றைச் செய்யுமாறு” இராணுவத்தினரிடம் கேட்டுக் கொண்டார்.[100]

ஏப்ரல் 19, 2022 அன்று ரம்புக்கனையில் போராட்டக்காரர்கள் மீது பொலிசார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஒருவர் கொல்லப்பட்டார், மேலும் 20 பேருக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.[101] நீதவான் நீதிமன்ற நடவடிக்கைகளின் போது[102] சம்பவம் தொடர்பான பொலிஸாரின் B அறிக்கையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது தெரியவந்தது. நேரில் கண்ட சாட்சிகள் பொலிசாரின் பதிவுகளுடன் முரண்பட்டனர்.[103]

---

97‘Comment: Legality of the State Response to the Right to Protest in the light of the Covid-19 Pandemic’ Centre for Policy Alternatives 29th November 2021 https://www.cpalanka.org/comment-legality-of-the-state-response-to-the-right-to-protest-in-the-light-of-the-covid-19-pandemic/
98 ‘Sri Lanka: Penalized for Protesting: Sri Lanka’s Crackdown on Protesters’ Amnesty International 8th September 2022 https://www.amnesty.org/en/documents/asa37/5986/2022/en/
99 ‘Sri Lanka: New Emergency regulations and shooting orders threaten human rights’ Amnesty International 11 May 2022 https://www.amnesty.org/en/latest/news/2022/05/sri-lanka-new-emergency-regulations-and-shooting-orders-threaten-human-rights/
100‘Sri Lanka's acting President, Ranil Wickremesinghe, tells military to do 'whatever is necessary' to restore order’ ABC Net 14th July 2022 https://www.abc.net.au/news/2022-07-14/ranil-wickremesinghe-tells-sri-lanka-military-to-restore-order/101237112
101 ‘Sri Lanka crisis: One killed after police fire live bullets at protesters’ BBC 20th April 2022 https://www.bbc.com/news/world-asia-61151037
102 The HRCSL also investigated the incident. The police investigation was later handed over to the Criminal Investigation Department (CID). See Wasantha Ramanayake, ‘Rambukkana eyewitnesses contradict police version of deadly shooting ‘ The Sunday Times 24th April 2022 https://www.sundaytimes.lk/220424/news/rambukkana-eyewitnesses-contradict-police-version-of-deadly-shooting-480857.html
103ibid

போராட்டக்காரர்கள் மீது பொலிசாரும் இராணுவத்தினரும் தாக்குதல் நடத்துதல், முரட்டுத்தனமாக நடந்து கொள்ளுதல் மற்றும் பலத்தை பயன்படுத்துதல் போன்ற பல்வேறு சம்பவங்கள் வீடியோ காட்சிகளுடனும்[104] மற்றும் பிற சான்றுகளுடனும் நிகழ்நிலை மூலமாக வெளியிடப்பட்டுள்ளன.[105] போராட்டக்காரர்களைக் கலைப்பதற்கு நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப் புகைக்குண்டுகள் பொலிசாரால் பயன்படுத்தப்படுவது ஒரு வழமையான செயற்பாடாக உள்ளது.[106] பலப்பிரயோகம் மற்றும் துப்பாக்கி பயன்படுத்துதல் தொடர்பில் சட்ட அமுலாக்க அதிகாரிகள் பின்பற்ற வேண்டிய கோட்பாடுகளை மீறும் பல சம்பவங்கள் பொலிசாரின் நடத்தையில்[107] காணப்படுகின்றன.

## தாற்பரியங்கள்

2022இல் நடைபெற்ற போராட்டங்களுக்கு அரசின் பதிலளிப்பானது, எதிர்ப்பை மௌனிப்பதற்கான ஒரு பயத்தை ஏற்படுத்தும் விளைவை உருவாக்கியுள்ளது. துரிதகதியில் சுருங்கி வரும் சிவில் பரப்பு மற்றும் அமைதியான போராட்டங்களை குற்றமாக்குதல், ஒன்றுகூடுவதற்கான உரிமை, ஒருங்குசேர்வதற்கான உரிமை மற்றும் பேச்சு உரிமை என்பவற்றை கட்டுப்படுத்துவதன் மூலம் பாதகமான தாக்கங்களை உருவாக்குகின்றன. இந்த உரிமைகளை கட்டுப்படுத்துவதற்கு போதுமான காரணங்களை வழங்க அரசு தவறிவிட்டது. சமனற்ற, இணையான அல்லது சட்டத்திற்குப் புறம்பான வகையில் கட்டுப்பாடுகள் தொடர்கின்றன. காலப்போக்கில் இந்த கட்டுப்பாடுகள், அடிக்கடி நிகழும் படையினரின் அதிகார துஷ்பிரயோகம் என்பவற்றுடன் சேர்ந்து நியமங்களாக மாற்றம் பெற்றுள்ளன. மேலும் அவை இலங்கையில் இருக்கும் தண்டணையின்மை சூழலுக்கு பங்களிப்பு செய்கின்றன.

---

104‘VIDEO: Lawyer Nuwan Bopage is dragged away by police’ ABC Net 15th September 2022 https://www.abc.net.au/news/2022-09-15/nuwan-bopage-is-arrested-in-sri-lanka/101437506
105 Guardian News, ‘Sri Lankan forces raid anti-government protest camp’ Youtube 22nd July 2022 https://www.youtube.com/watch?v=AuXLzOuBchg
106 ‘Police attack peaceful protesters in Colombo protesting government's lavish Independence Day gala’ News First 4th February 2023 https://english.newsfirst.lk/2023/2/4/police-attack-peaceful-protesters-in-colombo-protesting-government-s-lavishindependence-daygala
107 ‘Basic Principles on the Use of Force and Firearms by Law Enforcement Officials’ United Nations Office of the High Commissioner of Human Rights https://www.ohchr.org/en/instruments-mechanisms/instruments/basic-principles-use-force-and-firearms-law-enforcement

இதற்கிடையில் போராட்டக்காரர்களால் எழுப்பப்பட்ட பல பிரச்சனைகள் தீர்க்கப்படாமல் உள்ளன. மற்றும் குடிமக்கள் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு ஆகியவற்றின் சுமைகளை தொடர்ந்தும் சுமக்கின்றனர். நிகழவிருக்கும் மனிதாபிமான நெருக்கடி சூழலில் தற்போதைய நிலைமையின் நிலையற்ற தன்மை பெரும் கவலையை ஏற்படுத்தக் காரணமாக உள்ளது. இந்த மனிதாபிமான நெருக்கடியை இலங்கை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இருப்பினும் இவற்றுடன் மற்றும் பிற முக்கியமான பிரச்சனைகளை அரசாங்கம் எதிர்கொள்ளாமல் அச்சம் மற்றும் மிரட்டல் சூழலை நிலை நிறுத்துவதில் கவனம் செலுத்துகின்றது. மக்களின் குறைகளுக்கு பழிவாங்கும் நடவடிக்கை மூலமும் மற்றும் வன்முறை மூலமும் பதிலளிக்கிறது.

இலங்கை ஒரு அமைதியான போராட்டத்தின் வளமான வரலாற்றைக் கொண்டுள்ளது. சமீபத்தில் கட்டுப்பாடுகள் மற்றும் பழிவாங்கல்கள் இருந்த போதிலும் குடிமக்கள் தமது ஒன்றுகூடுவதற்கான உரிமை, ஒருங்குசேர்வதற்கான உரிமை மற்றும் பேச்சு உரிமை என்பவற்றை தொடர்ந்தும் பயன்படுத்தினர். எனவே, எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமை பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும். அதேபோன்று மௌனிக்கப்படுவோம் என்ற அச்சம் இன்றி குறைகளை வெளிப்படுத்தவும் கருத்து வேறுபாடுகளை தெரிவிக்கவும் குடிமக்களுக்கு வாய்ப்பும் இடமும் வழங்குவது அவசியமாகும்.